1986 நவம்பர் 19]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற கோவில்களுக்கு மட்டும் அங்கீகாரம் அளித்து, புதிய கோவில்கள் தோன்றாமல் இருப்பதற்கு, புதிய இடங்களை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டத்தில் இதற்கான வழி வகுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற அந்த உயரிய தத்துவத்தை உள்ளடக்கி, தற்சமயம் பிறந்ததே போதும், இனி பிறப்பதைத் தவிர்ப்போம் என்ற குடும்பக் கட்டுப்பாடு நிலையைப்போல், இன்றுள்ள கோவில்களைக் காப்பாற்றினாலே போதும் என்ற நிலைமையில், தேவையற்ற, முறையற்ற போக்குவரத்திற்கு கெடுதல் விளைவிக்கின்ற வகையில் உள்ளவைகளை ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த அரசியல் ஆன்மீகம் கலந்த ஒரு குழுவை அமைத்து அரசு சீர்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சொல்வன்மை மிக்க மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இந்தப் பணியை மேற்கொண்டால், நல்ல பலன்களை விளைவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 94, 95 மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க முன்னதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் காட்டுநாயக்கர் வகுப்பினர்.

94—(*வினா எண் 3876)—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காட்டுநாயக்கர் என்ற வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா ?

(ஆ) அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ''காட்டுநாயக்கர்'' இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பழங்குடியினர் என்று இனச்சான்று வழங்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் இவ்வினத்தாருக்கு அளிக்கப்படுகின்றன.

[1986 நவம்பர் 19

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேகூட காட்டு நாயக்கர்கள் ஒரு பகுதியில் இருக்கிறார்கள், ஆனால் அந்த காட்டுநாயக்கர்கள் அந்த ஜாதிச் சான்றிதழ் வாங்கச் செல்லுகின்றபோது, அது அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அப்படி மறுக்கப்படாமல், காட்டுநாயக்கர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாட்டை ஆங்காங்கு அதிகாரிகள் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பழங்குடியினராக இருந்தால், அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சியாளர்களை அணுகி, அவர்கள் அதை ஆய்வு செய்து கொடுப்பதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது அப்படி இருப்பார்களானால், அதை கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் செங்கோட்டை தாலுகாவில் காட்டு நாயக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் பழைய கேரள மாநிலத்தைச் சார்ந்த கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு செங்கோட்டை பகுதியில் உள்ள காட்டு நாயக்கர்கள் ஜாதி சான்றிதழ் வாங்குவதற்கு கஷ்டப்படுகிறார்கள். பல முறை செங்கோட்டை தாசில்தார், ஆர். டி. ஓ. ஆகியோர்களிடம் சொல்லியும், அந்த மக்களை அல்லலுறச் செய்து, இழுத்தடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ் விஷயம் குறித்து அரசு குறிப்பு அனுப்பி, இதுபோன்ற ஏழை மக்களுக்கு உடனடியாக இந்த சர்டிபிகேட் கிடைக்கின்ற வகையில் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கர்களைப் பொறுத்தவரையில் பழங்குடியினர் என்று மீண்டும் சான்றிதழ் வழங்குவதற்கு மைய அரசு அவ்வப்போது ஆணை பிறப்பித்து செயல் படுத்தி வருகிறது. அதை மாநில அரசு மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகக் கவனப்படுத்துகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்னையிருந்தால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காட்டுநாயக்கர்கள் சமூகத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் 6 மாதங்கள் காட்டிலும், 6 மாதங்கள் வீட்டிலும் என்றிருக்கக்கூடிய நிலைமையில், 6 மாதங்கள் வீட்டில் இருக்கக்கூடிய நேரத்தில் அரசு அதிகாரிகளிடம் சென்று சான்றிதழ் கேட்கின்றபோது, அதை அவர்கள் உடனடியாகப் பெற முடிவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளைக்

1986 நவம்பர் 19]

கேட்கின்றபோது, அரசு சர்வே செய்தபோது, சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன என்கிறார்கள். எனவே, இந்த காட்டு நாயக்கர்களுக்கு உதவுகின்ற நோக்கத்தோடு, அரசு மீண்டும் எந்தெந்தப் பகுதிகளிலே காட்டுநாயக்கர்கள் வசிக்கின்றார்கள் என்று ஆய்ந்து என்னுடைய தொகுதியாகிய........(மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே உள்ள கனக்காடு பகுதியிலே 125 குடும்பங்கள் காட்டு நாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுடைய எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டில் காட்டு நாயக்கர் என்றுதான் பதிவாகியிருக்கிறது. ஆனால் அவர்கள் படித்து முடித்து வேலைக்குச் செல்லும் போதோ அல்லது உயர்படிப்பிற்குச் செல்லும்போதோ காட்டு நாயக்கர் என்று சர்டிபிகேட் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு காட்டு நாயக்கர் என்று சர்டிபிகேட் கொடுக்கச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உண்மையாக இருக்குமானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு தனி வாசக சாலை.

95—(வினா எண் 7860) திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி கிராமத்தில ஆதிதிராவிடர்கட்கு தனியாக வாசக சாலை கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) விரைவில் வேலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தாயில்பட்டி கிராமத்திலே ஒரு லோக்கல் லைப்ரரி இருக்கிறது. ஆனால் ஆதிதிராவிட மாணவர்கள் அங்கே